## சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று "திருத்தணி" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கை நிராகரித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை

அரசாணை (டி) எண்.487 நாள். 07.11.2012

ஐப்பசி, 22

திருவள்ளுவர் ஆண்டு, 2043

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. வணிகவரி ஆணையர் கடிதம் எண். சட்டக்குழு–4/31698/2012, நாள் 09.10.2012 தேர்வுக்குழு எண். 53/2012–2013.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. வணிகவரி ஆணையர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், "திருத்தணி" தமிழ் திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களில் 2 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 1 அலுவல் சாரா உறுப்பினர் ஆகியவர்கள் கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு இத்திரைப்படம் தகுதியானது அல்ல என்றும், மற்ற 3 அலுவல் சாரா உறுப்பினர்களும் கேளிக்கை வரி விலக்கு அளிக்கலாம் என்றும் பரிந்துரை செய்துள்ளார்கள். வணிகவரி ஆணையர் செயல்முறை கடித எண்.சட்டக்குழு 4/569/2012 நாள் 09.01.2012, பக்கம் 3, பத்தி 9–ன்படி தேர்வுக்குழு உறுப்பினர்களின் முடிவு சம அளவில் இருக்கும் பட்சத்தில், திரைப்படம் கேளிக்கை வரி விலக்கு பெற இயலாது என்பதன் அடிப்படையில் "திருத்தணி" திரைப்படம் கேளிக்கை வரி விலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என்று தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட சூழ்நிலையில், கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பார்வையிட்ட உறுப்பினர்களின் பரிந்துரை சமஅளவில் உள்ளதால், 9.1.2012 நாளிட்ட வணிகவரி ஆணையரின் செயல்முறையின் அடிப்படையில் "திருத்தணி" தமிழ் திரைப்படம் தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்க தகுதியானது அல்ல என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனீல் பாலீவால்,
அரசு செயலாளர்.

பெறுநர்

வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
முதுநிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 7/11/12